இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 04

**EPU4531- கற்றல் கற்பித்தலில் முன்நோக்கு**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 09.03.2024 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி – I

1. ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கு கல்வித் தத்துவம் பற்றிய அறிவு முக்கியமானது என்பதை நிருபிப்பதற்குரிய **ஐந்து** (05) காரணங்களைக் குறிப்பிடுக.

2. **பெஸ்டொலொஜி என்பவரின் (Pestalozzi)** கல்வித் தத்துவத்தை இலங்கையின் ஆரம்பக் கல்விக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப்பற்றி சுருக்கமாக கலந்துரையாடுக.

3. மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாட்டை விளையாட்டின் மூலம் கற்பிப்பதில் ஆசிரியரின் வகிபங்கை சுருக்கமாக கலந்துரையாடுக.

4. கணிப்பீட்டுக் கருவியாக வினாவுதலை பயன்படுத்தும் போது கவனத் செலுத்தும் நான்கு (04) உத்திகளைக் குறிப்பிடுக. அவற்றில் **ஒன்றை** (01) சுருக்கமாக விபரிக்குக.

5. ஆரம்ப வகுப்பறையில் கற்றல் உத்தியாக “காட்சிப்படுத்தலை” எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள்?

6. சிறுவர் நேய கற்றல் சூழலில் தாக்கம் செலுத்தும் **நான்கு** (04) காரணிகளை சுருக்கமாக விளக்குக.

7. அ. ஆசிரியர்கள்
   ஆ. மாணவர்கள்
   இ. பெற்றோர்களுக்கான கணிப்பீட்டின் முக்கியத்துவத்தை விளக்குக.

8. தரம் ஒன்றிற்கு பிள்ளைகள் நுழையும் போது மேற்கொள்ளப்படும் நுழைவுத் தேர்ச்சி செயற்பாடுகளில் **ஒன்றை** (01) சுருக்கமாக விபரிக்குக.

**(05x08 =40புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** 1997 இல் அறிமுகப்படுத்தப்பட்ட முதன்மை நிலை மூன்றினதும் (Key Stage I , II , III ) ஆரம்பக்கல்வி சீர்திருத்தத்தின் கீழ் உட்படுத்தப்பட்ட அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை அடைவதன் முக்கியத்துவத்தை உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**ii.** ஆரம்பக் கல்வியிலிருந்து இடைநிலைக் கல்வி வரை, மாணவர்களுக்கு சுமூகமான மாற்றத்தை வழங்க, ஆரம்பப்பிரிவு ஆசிரியராக உங்கள் வகிபங்கை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

10. **i.** பிள்ளை விருத்தியில் சூழலின் தாக்கம் பற்றி யூரி ப்ரோன் பேர்னர் **(Yuri Bronfenbrenner)** அறிமுகப்படுத்திய தனியாள் விருத்தியின் சூழலியல் சார் மாதிரியை வரைபடத்துடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**ii.** ஆரம்பப் பிரிவு வகுப்பறையில் இம்மாதிரியை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. **i.** அக்ரவல் மற்றும் குப்தா **(Aggrawal & Gupta** 2007) குறிப்பிடுவது போல், கற்றல் துணைச் சாதனங்களை பயன்படுத்தும் போது ஆசிரியரொருவர் கருத்திற் கொள்ள வேண்டிய ஐந்து (05) கொள்கைகளைச் சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**ii.** ஆரம்பப்பாடசாலை மட்டத்தில் பின்வரும் கற்பித்தல் - கற்றல் துணைச்சாதனங்களை எவ்வாறு வினைத்திறனாக பயன்படுத்துவது பற்றி விளக்குக.

அ. கரும்பலகையின் பயன்பாடு

ஆ. படங்களின் பயன்பாடு

இ. பாடப்புத்தகங்களின் பயன்பாடு

**(10 புள்ளிகள்)**

12. **i.** சிறுவர் நேய கற்றல் சூழலின் பண்புகளை பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

**ii.** பௌதீக மற்றும் உளவியல் ரீதியான கற்றல் சூழலை எவ்வாறு வினைத்திறனாக வடிவமைப்பீர்கள் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. **i.** இலங்கையில் ஆரம்பக் கல்வியில் உள்ள மிக முக்கியமான பிரச்சினைகளில் மூன்றைக் (03) குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**ii.** அப்பிரச்சினைகளை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்த காரணிகளை பகுப்பாய்வு செய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** மேலே இனங்காணப்பட்ட பிரச்சினைகளில் ஒன்றைத் தீர்க்க நீங்கள் எடுக்கக்கூடிய செயற்பாடுகள் மூன்றினைப் (03) பற்றி கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -